தினமணி

## நெல் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

First Published : 26 Mar 2010 06:33:06 AM IST
Last Updated : 26 Mar 2010 06:53:01 AM IST



புதுதில்லி. மார்ச் 25: நெல் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து, கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் நெல் உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

உலகிலேயே நெல் உற்பத்தியில் இரண்டாவது இடம் வகித்து வரும் இந்தியாவில், கடந்த ஆண்டு விளைச்சல் வெகுவாக குறைந்தது. கடந்த பருவத்தில் அரிசி உற்பத்தி 8 கோடியே 75 லட்சம் டன்கள். முந்தைய ஆண்டு உற்பத்தி 9 கோடியே 18 லட்சம் டன்கள் ஆகும். நெல் உற்பத்தி குறைந்ததால் அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில் இந்த ஆண்டு காரிப் பருவத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்க புதிய உத்திகளை அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி நெல் பயிரிடும் பரப்பளவு அதிகரிப்பது, குறைந்த காலத்தில் விளையும் நெல் பயிர்களை அதிக அளவில் பயிரிடுவது, பாசன வசதிகளை மேம்படுத்துவது என பல்வேறு வழிகளில் நெல் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் தில்லியில் நடைபெற்ற காரிப் பருவ ஆலோசனைக் கூட்டத்தில், உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய புதிய உத்திகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, பிகார், அசாம், சத்தீஸ்கர், ஒரிசா ஆகிய மாநிலங்களில் நெல் பயிரிடும் பரப்பளவை அதிகரிக்க வேண்டும் என்று கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

**கரும்பு சாகுபடியில் அதிக மகசூல்: சங்ககிரி பகுதி விவசாயி சாதனை**

First Published : 26 Mar 2010 12:53:40 AM IST

சங்ககிரி, மார்ச் 25: தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையத்தில் கரும்பு பயிரிட்டத்தில் சங்ககிரி அருகே உள்ள விவசாயி மாநிலளவில் ஓர் ஏக்கருக்கு 116 மெட்ரிக் டன் கரும்பு அதிக மகசூல் எடுத்துள்ளார்.

சங்ககிரி அருகே உள்ள அரசிராமணி கிராமப் பகுதியைச் சேர்ந்தவர் எஸ்.ராஜா. விவசாயி. இவர் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையம் முறையில் ஒரு ஹெக்டர் பரப்பில் கோ.86032 என்ற கரும்பு ரகத்தினை சிறப்பு பட்டத்தில் சாகுபடி செய்து அதற்கு சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழி உரப்பாசனக் கருவிகளை தானியங்கி முறையில் அமைத்து நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழி உரப்பாசனங்களை செய்துள்ளார்.

இந்த விவசாயி ஒரு ஹெக்டருக்கு ரூ.11 ஆயிரத்து 200-ஐ தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், ரூ.28 ஆயிரத்து 800-ஐ தோட்டக்கலை வளர்ச்சி வாரியத்தின் நிதியில் நுண்நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேலம் துணை இயக்குநர் அலுவலத்திலும் மானியமாக மொத்தம் ஒரு ஹெக்டருக்கு ரூ.40 ஆயிரம் பெற்று சாகுபடி செய்துள்ளார்.

மேலும் அவர் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட முழுவதும் நீரில் கரையக்கூடிய இரசாயன உரங்களை வேளாண்மைத்துறை மூலம் மானியமாக பெற்று குறிப்பிட்ட காலங்களில் நீர்வழி உரப்பாசனம் செய்தார். துல்லிய பண்ணையம் மூலம் கரும்பு பயிரிட்டதால் ஒரு ஹெக்டருக்கு 205 மெட்ரிக் டன் கரும்பு மகசூல் எடுத்துள்ளார்.

கரும்பு வயல் அறுவடை தின விழாவில் சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன், சேலம் வேளாண் துணை இயக்குநர்(மத்தியரசு திட்டங்கள்) ஜீ.உதயகுமார், ஏத்தாப்பூர் ஆமணக்கு மற்றும்  மரவள்ளி ஆராய்ச்சி நிலையத்தின் உதவி பேராசியர் (உழவியல்) கே.திருக்குமரன் மற்றும் துல்லிய பண்ணைய விவசாயிகள் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளின் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது . விவசாயின் சாதனையை அனைவரும் பாராட்டினர்.

இதுகுறித்து விவசாயி ராஜா கூறியது: கடந்த ஆண்டு இதே ரகம் கரும்பு சாதாரண முறையில் பயிரிட்ட போது 40 மெட்ரிக் டன் மட்டுமே மகசூல் கிடைத்தது. தற்போது துல்லிய பண்ணையம் முறையில் பயிரிட்டதால் ஏக்கருக்கு 82 மெட்ரிக் டன் மகசூல் கிடைத்துள்ளது என்றார்.

இதுகுறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் கூறியது:
சங்ககிரி வேளாண் உட்கோட்டத்தில்  துல்லிய பண்ணையம் திட்டத்தின் மூலம் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் தொடர்ந்து அதிக மகசூலை பெற்று வருகின்றனர். இந்த திட்டத்தினை முறையாக மற்ற விவசாயிகளும் பயன்படுத்தினால் அதிக மகசூலை பெறுவதோடு நிகர லாபத்தினையும் அடைய முடியும் என்றார்.

**அழகுமலர் ஆட...**

First Published : 26 Mar 2010 12:24:00 AM IST




புதுச்சேரி வேளாண்துறை சார்பில் தாவரவியல் பூங்காவில் மலர், காய்கறி மற்றும் கனி கண்காட்சியை வியாழக்கிழமை திறந்து வைத்து பார்வையிட்ட துணைநிலை ஆளுநர் இக்பால் சிங் (இடது). (வலது படம்) கண்காட்சியில் இடம் பெற்றுள்ள மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள பொம்மை.

புதுச்சேரி வேளாண்துறை சார்பில் தாவரவியல் பூங்காவில் மலர், காய்கறி மற்றும் கனி கண்காட்சியை வியாழக்கிழமை திறந்து வைத்து பார்வையிட்ட துணைநிலை ஆளுநர் இக்பால் சிங் (இடது).(வலது படம்) கண்காட்சியில் இடம் பெற்றுள்ள மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள பொம்மை.

**வேளாண் தகவல்களை தெரிந்து கொள்ள இணையதளம்**

First Published : 26 Mar 2010 12:00:00 AM IST

சிதம்பரம், மார்ச் 25: வேளாண்மை தொடர்பான அனைத்து தகவல்களையும் தெரிந்து கொள்ளும் வகையில் வேளாண் இணையதளம் ஒன்றை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

÷இந்த இணையதளம் மூலம் விவசாயிகள் சந்தை நிலவரம் பற்றிய தகவல்களையும் அவ்வப்போது தெரிந்து கொள்ளலாம் என தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ம.முருகேசபூபதி தெரிவித்தார்.

÷சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக சாஸ்திரி ஹாலில் உழவர் தின விழா புதன்கிழமை நடைபெற்றது. விழாவில் சிறப்புரையாற்றிய முருகேசபூபதி இதைத் தெரிவித்தார்.

÷விழாவில் வேளாண்புல முதல்வர் பூ.நாராயணசாமி தலைமை வகித்துப் பேசுகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புலம் கண்டுபிடித்த ஏயூ1 நெல், ஏயூ1 கத்திரி ரகங்கள் குறித்தும், உயிர் உரங்களில் பூச்சிக்கொல்லி மருந்தாக உள்ள பழுப்பு நிலக்கரி சாம்பலின் பயன்பாடு குறித்தும் தெரிவித்தார். மேலும் தமிழ்நாடு வேளாண் வேளாண் பல்கலையுடன் இணைந்து செயலாற்ற அண்ணாமலை பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்றார்.

÷அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.ராமநாதன் தொடக்கவுரையாற்றினார். அவர் பேசுகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் ஆராய்ச்சிகள் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளது. அவை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

÷வேளாண் விரிவாக்கத்துறை தலைவர் பேராசிரியர் ஜெ.வசந்தகுமார் வரவேற்றார். கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் வாழ்த்துரையாற்றினார். விரிவுரையாளர் பி.சண்முகராஜா நன்றி கூறினார்.

÷விழாவை முன்னிட்டு பல்கலைக்கழக வேளாண்புல வளாகத்தில் உழவர்கள் பயன்பெறும் வகையில் வேளாண் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

**பயிற்சிகளை விவசாயிகள் முழுமையாக செயல்படுத்த வேண்டும்**

First Published : 26 Mar 2010 07:08:16 AM IST

ஆலங்குடி, மார்ச் 25: வேளாண் அறிவியல் நிலையங்களில் பெறும் பயிற்சிகளை விவசாயிகள் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் கோவை. பா. கலைச்செல்வன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வார விழாவை திங்கள்கிழமை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

விவசாயத்தைப் பெருக்கவும், விவசாயிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் அரசு பல்வேறு நவீன வேளாண் தொழில்நுட்பங்களை வெளியிடுகிறது. இந்த தொழில்நுட்ப பயிற்சிகள் வேளாண் ஆராய்ச்சி- அறிவியல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பயிற்சி பெறும் விவசாயிகளில் 30 சதம் பேர் மட்டுமே அதை கடைப்பிடிக்கின்றனர். மற்றவர்கள் பயிற்சி பெறுவதோடு அப்படியே விட்டுவிடுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் கடந்த ஆண்டு மட்டும் வம்பன் 3 (பச்சைப்பயறு), திண்டிவனம் 7 (எள்) உள்ளிட்ட 11 வகையான புதிய ரகங்கள் உள்ளிட்ட 746 ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சூழ்நிலைக்கேற்ற ரகங்களை பயிரிட விவசாயிகள் தெரிந்து வைத்திருப்பது அவசியம். விதை உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தும் போதுதான் புதிய ரகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

அயல் நாடுகளில் கடலை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக பயன்படுத்துவதால் கிலோ ரூ. 350-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், உணவுப் பொருள்களின் தேவை அதிகமாக இருப்பதால் விவசாயிகள் விழிப்புணர்வுடன் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டால் அதிக பயனடையலாம்.

அனைத்துப் பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த பண்ணையத்தைப் பின்பற்றுவதால் அதிக மகசூல், மண் வளப் பாதுகாப்பு, உற்பத்தி அதிகரிப்பு, பருவ நிலை ஆகியன உறுதி செய்யப்படும் என்றார் கலைச்செல்வன்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் தலைவர் மதுரை க. வைரவன், வேளாண் இணை இயக்குநர் ஆர். பழனியப்பன்,இயக்குநர்கள் ஏ. தாஜுதீன், ஜி. கதிரேசன், அண்ணாமலை உள்ளிட்டோர் பேசினர்.

வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப. சின்னையன் வரவேற்றார். பயறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் மெ. ராமசாமி நன்றி கூறினார்.

**வேளாண் அறிவியல் நிலையங்களில் பெற்ற பயிற்சிகளை விவசாயிகள் முழுமையாக செயல்படுத்த வேண்டும்: வேளாண் பல்கலை. விரிவாக்க கல்வி இயக்குநர் வலியுறுத்தல்**

First Published : 26 Mar 2010 07:07:48 AM IST

ஆலங்குடி, மார்ச் 25: வேளாண் அறிவியல் நிலையங்களில் பெறும் பயிற்சிகளை விவசாயிகள் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் கோவை. பா. கலைச்செல்வன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வார விழாவை திங்கள்கிழமை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

விவசாயத்தைப் பெருக்கவும், விவசாயிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் அரசு பல்வேறு நவீன வேளாண் தொழில்நுட்பங்களை வெளியிடுகிறது. இந்த தொழில்நுட்ப பயிற்சிகள் வேளாண் ஆராய்ச்சி- அறிவியல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பயிற்சி பெறும் விவசாயிகளில் 30 சதம் பேர் மட்டுமே அதை கடைப்பிடிக்கின்றனர். மற்றவர்கள் பயிற்சி பெறுவதோடு அப்படியே விட்டுவிடுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் கடந்த ஆண்டு மட்டும் வம்பன் 3 (பச்சைப்பயறு), திண்டிவனம் 7 (எள்) உள்ளிட்ட 11 வகையான புதிய ரகங்கள் உள்ளிட்ட 746 ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சூழ்நிலைக்கேற்ற ரகங்களை பயிரிட விவசாயிகள் தெரிந்து வைத்திருப்பது அவசியம். விதை உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தும் போதுதான் புதிய ரகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

அயல் நாடுகளில் கடலை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக பயன்படுத்துவதால் கிலோ ரூ. 350-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், உணவுப் பொருள்களின் தேவை அதிகமாக இருப்பதால் விவசாயிகள் விழிப்புணர்வுடன் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டால் அதிக பயனடையலாம்.

அனைத்துப் பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த பண்ணையத்தைப் பின்பற்றுவதால் அதிக மகசூல், மண் வளப் பாதுகாப்பு, உற்பத்தி அதிகரிப்பு, பருவ நிலை ஆகியன உறுதி செய்யப்படும் என்றார் கலைச்செல்வன்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் தலைவர் மதுரை க. வைரவன், வேளாண் இணை இயக்குநர் ஆர். பழனியப்பன்,இயக்குநர்கள் ஏ. தாஜுதீன், ஜி. கதிரேசன், அண்ணாமலை உள்ளிட்டோர் பேசினர்.

வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப. சின்னையன் வரவேற்றார். பயறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் மெ. ராமசாமி நன்றி கூறினார்.

**பல்முனைத் தாக்குதலால் விவசாயப் பரப்பு குறைந்து வருகிறது**

First Published : 26 Mar 2010 07:16:13 AM IST

திருவாரூர், மார்ச் 25: பாசன நீர், கடனுதவி ஆகியவற்றுக்கு உத்தரவாதமின்மை, விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் விவசாயப் பரப்பு படிப்படியாகக் குறைந்து வருகிறது என்றார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம்.

திருவாரூரில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட மாநாட்டில் அவர் மேலும் பேசியது:

அரசின் தவறான கொள்கைகள் காரணமாக 40 சத விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். அரசுகளின் பல்வேறு கொள்கை மாறுபாடுகள் காரணமாக வேளாண் தொழில் பெரும் பாதிப்பை சந்தித்து வருகிறது. தொழில்துறைகளைப் பாதுகாக்க பல்வேறு திட்டங்களையும், சட்டங்களையும் இயற்றும் அரசுகளுக்கு இயற்கையை மட்டுமே நம்பியுள்ள வேளாண்துறைக்கு அதிக பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம்கூட ஏற்படவில்லை.

தமிழகத்தில் பல மாவட்டங்களில் விவசாய சங்கம் நடத்திய போராட்டத்தின் காரணமாக சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு என எடுக்கப்படவிருந்த விளை நிலங்கள் தப்பித்தன.

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதித்தீர்ப்பு பெறப்பட்டு ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகியும், மத்திய அரசின் அலட்சியத்தால்,

இதுவரை அமல்படுத்தப்படவில்லை. இதேபோல முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் தமிழக விவசாயிகளின் நலன்களைப் புறக்கணித்து, புதிய அணை கட்டப்படுமென கேரள அரசு பிடிவாதத்துடன் உள்ளது. இதை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

பருவ மழை பொய்த்து விடுகிறது. வெள்ளம் வரும் போது நீர் அனைத்தும் கடலில் சேர்ந்து விடுகிறது. விவசாயத்துக்கு பெருமளவில் ஆழ்க்குழாய் கிணறுகளை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவோ, மழை நீரை சேமிக்கும் திட்டங்களையோ அரசு செயல்படுத்தவில்லை. விவசாயம் நலிந்து வரும் தொழில் என்ற நிலையில் 70 சத இளைஞர்கள் இத்தொழிலில் ஈடுபட விரும்புவதில்லை. இத்தொழிலில் இளைஞர்களை ஈர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் உணவு உற்பத்தி கேள்விக்குறியாகி விடும் என்றார் துரைமாணிக்கம்.

**நாகையில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 26 Mar 2010 07:14:50 AM IST

நாகப்பட்டினம், மார்ச் 25: நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை (மார்ச் 26) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம்.

**சுழற்சி முறையில் வெள்ளாடு வளர்ப்பு திட்டம்: ரூ.13.8 லட்சம் நிதி ஒதுக்கீடு**

First Published : 26 Mar 2010 03:18:49 AM IST

திருப்பூர், மார்ச் 25: சுழற்சியில் முறையில் வெள்ளாடு வளர்ப்பு திட்டத்தை வரவேற்றுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த திருப்பூர் ஆராய்ச்சி மையத்துக்கு ரூ.13.8 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

÷திருப்பூர் கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் அறிமுகம் செய்யப்பட்ட சுழற்சி முறையில் வெள்ளாடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஏழை பெண்களுக்கு வெள்ளாடுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஓராண்டுக்குப் பின்பு அந்த ஆடு ஈனும் குட்டிகளில் முதல் பெட்டை ஆட்டுக் குட்டியை ஆராய்ச்சி மையத்தினர் திரும்பப் பெற்று வேறு ஏழை பெண்களுக்கு இலவசமாக வழங்குகின்றனர்.

÷அதன்படி, கடந்த 2002ம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இதுவரை 505 பெண்களுக்கு 505 வெள்ளாடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகளின் மூலம் ரூ.40 லட்சம் வருவாயை அப்பெண்கள் பெற்று பயனடைந்துள்ளனர். ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்துக்கு சென்னையிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலை. வரவேற்பு அளித்துள்ளது.

÷அத்துடன், இத்திட்டத்தை பல்கலை. சார்பிலேயே மேலும் விரிவுபடுத்த திருப்பூர் ஆராய்ச்சி மையத்துக்கு 2010-11ம் ஆண்டுக்கான நிதியாக ரூ.13.8 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதையடுத்து, முதன்முறையாக கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் மலைவாழ் பெண்களுக்கு சுழற்சி முறையில் வெள்ளாடுகள் வழங்கும் விழா திருப்பூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷திருப்பூர் மாவட்ட கால்நடை மருத்துவ மைய இணை இயக்குநர் (பொறுப்பு) வி.மகேந்திரன் தலைமை தாங்கி வெள்ளாடுகளை வழங்கினார். உதவி இயக்குநர் பிரான்சிஸ்சா முவேல்மோகன் முன்னிலை வகித்தார். கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் ஆர்.செல்வராஜ் இத்திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கம் அளித்தார்.

÷இவ்விழாவில் கோவை மாவட்டம் காரமடை பகுதியிலுள்ள கோப்பனாரி, அரக்கடவு, ஆலாங்கண்டி, ஆலாங்கண்டிபுதூர், சீங்குழி உள்ளிட்ட மலைவாழ் கிராமங்களைச் சேர்ந்த 50 ஏழை பெண்களுக்கு இலவசமாக வெள்ளாடுகள் வழங்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் ஏழைப் பெண்களுக்கு இலவசமாக ஆடுகள் வழங்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மானிய விலையில் ரசாயன உரம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 26 Mar 2010 01:51:24 AM IST

வத்தலகுண்டு, மார்ச் 25: நிலக்கோட்டையில் மாவட்டப் பூ உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்க விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு மாவட்ட சங்கத் தலைவர் பரமசிவம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் மாசாணம் முன்னிலை வகித்தார். சங்க உறுப்பினர் மகாமுனி வரவேற்றார்.

இதில் நிலக்கோட்டை விவசாயிகள் நலன் கருதி செண்டு தொழிற்சாலையை அரசு அமைக்க வேண்டும். முழுமானியத்தில் இயற்கை உரம், ரசாயன உரங்களை அரசு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கருத்தரங்கில் இயற்கை வேளாண் தொழில்நுட்பப் பயிற்சியாளர் வேலுசாமி, சங்க துணைத் தலைவர் ராமசாமி, வேளாண் உதவி அலுவலர் கீதா மற்றும் நிலக்கோட்டை, ஆத்தூர், வத்தலகுண்டு, திண்டுக்கல் உள்பட பல பகுதிகளில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**9163 விவசாயிகளுக்கு ரூ.20.98 கோடி பயிர்க் கடன்: ஆட்சியர்**

First Published : 26 Mar 2010 07:11:41 AM IST

பெரம்பலூர், மார்ச் 25: பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டில் கூட்டுறவுத் துறை சார்பில், 9163 விவசாயிகளுக்கு ரூ.20.98 கோடி மதிப்பீட்டில் பயிர்க் கடன் அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர் மேலும் பேசியது:

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் தொடர்பான அனைத்து துறைகளும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. கிராமத்தின் முன்னேற்றத்தில்தான் அந்த நாட்டின் வளர்ச்சி உள்ளது. அந்த வகையில், அரசு அலுவலர்கள், விவசாயிகளி6ன் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டில் கூட்டுறவு வங்கி மூலம் 9163 விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக ரூ.20. 98 கோடி மதிப்பீட்டிலும், 431 விவசாயிகளுக்கு மத்திய கால கடனாக ரூ.78.31 லட்சம் மதிப்பீட்டிலும், 283 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொகையாக ரூ.7 கோடியே 79 லட்சத்து 81 ஆயிரமும், 12153 விவசாயிகளுக்கு ரூ.60.15 கோடி மதிப்பீட்டில் நகைக் கடனும் வழங்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்பட்டு வந்த வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேண்மைத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் ஏப்ரல் முதல் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

நீர்வரத்துக் கால்வாய், குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தொழில்நுட்பப் பயிற்சிகள், கண்டுநர் சுற்றுலா, விவசாய ஆர்வலர்கள் குழுக்கள், செயல் விளக்கங்கள், விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல், மாவட்ட அளவிலான பொருள்காட்சி ஆகியவற்றில் விவசாயிகள் பங்கேற்று தங்களது தொழில்நுட்பத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் விஜயகுமார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. பழனிசாமி, வேளாண்மை இணை இயக்குநர் வி. ராதாகிருஷ்ணன், மாவட்ட முன்னோடி வங்கி (லீட் பேங்க்) மேலாளர் மணிவண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன் உள்ளிட்ட விவசாயச் சங்கத் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மீஞ்சூரில் நெல் களம்: ஆட்சியர் உத்தரவு**

First Published : 26 Mar 2010 12:15:00 AM IST

திருவள்ளூர், மார்ச் 25: திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு நெல் களம் அமைத்திட மாவட்ட ஆட்சியர் வெ. பழனிகுமார் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

÷இங்கு நடைபெற்ற திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் இதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

÷மீஞ்சூர் ஒன்றியம், ஆலாடு கிராமத்தில் பிரகாஷ் என்ற விவசாயி விடுத்த கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் விவசாயிகள் பயனடையும் வகையில் நெல் களம் அமைக்கவும், விடையூர்- களியனூர் இடையே உடனடியாக தரைப்பாலம் அமைக்கவும் ஆட்சியர் உத்தரவிட்டார். கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் எஸ். சீனிவாசன் முன்னிலை வகித்தார்.

கோரிக்கைகள்: ஆத்துப்பாக்கம் கிராமத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

÷அழிஞ்சிவாக்கம்- எருமைவெட்டிப்பாளையம் இடையில் உள்ள ஏரியின் இரு புறங்களிலும் கரை கட்ட வேண்டும். அரசூர் கிராமத்தில் உள்ள ஏரியை தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தூர் வார வேண்டும். விடையூர்-களியனூர் இடையே தரைப்பாலம் அமைக்க வேண்டும். வயல் வெளியில் சாய்ந்த நிலையிலும், மிகவும் பழுதடைந்த நிலையிலும் உள்ள மின் கம்பங்களை உடனடியாக மாற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மனுக்களில் குறிப்பிட்டிருந்தனர்.

÷இதுகுறித்து பரிசீலித்த மாவட்ட ஆட்சியர், சம்பந்தபட்ட துறை அதிகாரிகளிடம் உடனடி விளக்கம் கேட்டு குறைகளை விரைவில் நிவர்த்தி செய்ய உத்தரவிட்டார். மேலும் புகார் மனுக்கள் வரப்பெற்றால், சம்பந்தப்பட்ட துறையினர் களத்துக்கே சென்று ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

÷ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜகோபால், பொதுப்பணி, வேளாண் துறை அதிகாரிகள், மின் வாரியம் மற்றும் வட்டார வளர்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

**உப்பு விற்பனையில் நிறுவனங்களுக்கு கொள்ளை லாபம்**

First Published : 26 Mar 2010 12:26:00 AM IST



**மொத்த விற்பனையாளர் கிடங்கில் உள்ள பாக்கெட் உப்பு**

புதுச்சேரி, மார்ச் 25: உப்பு உற்பத்தி அதிகரித்து, விலை குறைந்துள்ள நிலையில், உப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்டி வருகின்றன. ஆனால் அதன் பலன் நுகர்வோரைச் சென்றடையவில்லை.

உணவு வகைகளில் ஓர் அத்தியாவசியப் பொருளாக உப்பு திகழ்ந்து வருகிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வந்த போதும், உப்பு மட்டுமே உற்பத்தியாளர்கள் அளவில் கடும் விலைச் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வரை ரூ.3 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு டன் உப்பு விலையில் தற்போது 50 சதவீதம் வரை சரிவு ஏற்பட்டு, ரூ.1500-க்கு உற்பத்தியாளர்களிடம் கிடைக்கிறது என்கிறார் புதுச்சேரியில் உள்ள உப்பு மொத்த வியாபாரி எஸ். குமாரவேல்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: இதேபோல, ரூ.4.40 வீதம் 3 மாதங்களுக்கு முன்னர் வரை விற்பனை செய்யப்பட்ட 1 கிலோ கல் உப்பு தற்போது ரூ.2.28-க்கு கிடைக்கிறது. இதன் விலை இன்னும் சில மாதங்களில் வீழ்ச்சி அடையும் என்றார். இதை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சில்லறை வியாபாரிகள் உப்பு விலை வீழ்ச்சியடைந்த போதும், அதன் விலையைக் குறைத்து நுகர்வோருக்கு விற்பதில்லை என்கிறார் புதுச்சேரி பெரிய மார்க்கெட்டில் உள்ள மொத்த உப்பு வியாபாரி த. மாணிக்கம்.

இதனிடையே, தூத்துக்குடி மாவட்டத்தில் 6 லட்சம் டன் உப்பு தேக்கமானது குறித்து "தினமணி' யில் வெளியான செய்தியை புதுச்சேரி காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஏ.வி. வீரராகவன் சென்னையிலுள்ள உப்பு துணை ஆணையர் டாக்டர் ஜெய்பால்சிங் கவனத்துக்குக் கடிதத்தின் வாயிலாகக் கொண்டு சென்றார்.

இதற்குப் பதிலளித்து உப்பு துணை ஆணைய அனுப்பிய கடிதம்: தென் மாநிலங்களுக்கு ஆண்டுக்கு உப்பு தேவை 11.56 லட்சம் டன். இதில் ஏப்ரல் 2009 முதல் ஜனவரி 2010 வரை 6.48 டன் உப்பு மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த உப்பு உற்பத்தியாளர்கள் அத் தொழிற்சாலைகளை அணுகி அவர்களின் தேவைக்கு ஏற்ப உப்பை

விற்பனை செய்ய முயற்சி செய்யலாம். இருப்பினும் தூத்துக்குடி உதவி ஆணையர் இப் பிரச்னை குறித்து அறிக்கை அளிக்க பணிக்கப்பட்டுள்ளார் என அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலை பயிரின் நன்மைகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்: துணைநிலை ஆளுநர்**

First Published : 26 Mar 2010 12:00:00 AM IST

புதுச்சேரி, மார்ச் 25: புதுச்சேரியில் தோட்டக்கலை பயிரின் நன்மைகளை விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவிக்க வேண்டும் என்று துணைநிலை ஆளுநர் டாக்டர் இக்பால் சிங் தெரிவித்துள்ளார்.

÷புதுச்சேரியில் வேளாண்மைத் துறை சார்பில் 28-வது மலர், காய்கறி மற்றும் கனி கண்காட்சி தாவரவியல் பூங்காவில் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது. துணைநிலை ஆளுநர் டாக்டர் இக்பால் சிங் தொடங்கி வைத்தார்.

÷அவர் பேசியது: தோட்டக்கலை மற்றும் மலர்களை பயிரிடுவதால் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக பலன் கிடைக்கிறது. இதை சம்மந்தப்பட்ட துறையினர் விவசாயிகளிடம் தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் மொத்த விவசாயத்தில் 10 சதவீதம் தோட்டப் பயிர் மற்றும் மலர்கள் பயிரிடப்படுகிறது. இத்தகைய தோட்டப் பயிர்கள் குறைந்த செலவில் அதிக மகசூல் தரவல்லவை.

÷மற்ற பயிர்களில் வரும் வருமானத்தை விட தோட்டப் பயிர்கள் 4 மடங்கு அதிக லாபம் தரவல்லவை. இப்பயிர்களை விவசாயிகள் பயிர் செய்வதன் மூலம் அவர்களின் பொருளாதாரம் உயர்வதுடன், நாட்டின் பொருளாதாரமும் உயரும். தோட்டப் பயிராக கிடைக்கும் காய்கறிகளில் அதிக நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளது. இந்தியாவில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியில் தோட்டப் பயிர்கள் மூலம் கிடைக்கும் விலை பொருள்களின் ஏற்றுமதி 20 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றார்.

÷முதல்வர் வி.வைத்திலிங்கம் பேசியது: புதுச்சேரியில் 27 முறை மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. இப்போது முதல்முறையாக மலர், காய் மற்றும் கனி காட்சி நடைபெறுகிறது. கடந்த முறை தேர்தல் காரணமாக நடத்த முடியவில்லை. இந்த ஆண்டு கண்காட்சியின் சிறப்பு என்னவென்றால் பெரிய குளிரூட்டப்பட்ட கொட்டகையில் மலர்களை வைத்து வாடாமல் பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் செய்திருப்பது தான். மேலும் வெளிநாட்டு மலர்களும் இடம்பெற்றுள்ளன.

÷பல்வேறு விவசாயிகள் வந்து கண்காட்சியை பார்த்து செல்வார்கள். இதுபோன்ற மலர்கள் நம் நிலத்தில் வருமா என்ற சந்தேகம் ஏற்படும். அம்மலர்களின் அருகிலேயே தோட்டக்கலை துறையைச் சேர்ந்த அலுவலர் இருப்பார். அவர் உங்களின் சந்தேகங்களை தீர்த்து வைத்து, இது போன்ற மலர்களைப் பயிரிட நம்பிக்கையூட்டுவார்.

கண்காட்சியிலிருந்து விவசாயிகள் வெளியேறும்போது இதுபோன்று பயிரிட்டு, பலனடைய வேண்டும் என்ற நம்பிக்கை பிறக்கும் என்றார்.

÷உப்பளம் தொகுதி எம்எல்ஏ எ.அன்பழகன், புதுச்சேரி நகர்மன்றத் தலைவி பி.ஸ்ரீதேவி, நகர்மன்ற உறுப்பினர் ஆ.சுசீலா, வேளாண் செயலர் ஹாஜி கோஜின் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கரும்பு சாகுபடியில் அதிக மகசூல்: சங்ககிரி பகுதி விவசாயி சாதனை**

First Published : 26 Mar 2010 12:53:40 AM IST

சங்ககிரி, மார்ச் 25: தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையத்தில் கரும்பு பயிரிட்டத்தில் சங்ககிரி அருகே உள்ள விவசாயி மாறிலளவில் ஓர் ஏக்கருக்கு 116 மெட்ரிக் டன் கரும்பு அதிக மகசூல் எடுத்துள்ளார்.

சங்ககிரி அருகே உள்ள அரசிராமணி கிராமப் பகுதியைச் சேர்ந்தவர் எஸ்.ராஜா. விவசாயி. இவர் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையம் முறையில் ஒரு ஹெக்டர் பரப்பில் கோ.86032 என்ற

கரும்பு ரகத்தினை சிறப்பு பட்டத்தில் சாகுபடி செய்து அதற்கு சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழி உரப்பாசனக் கருவிகளை தானியங்கி முறையில் அமைத்து நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழி உரப்பாசனங்களை செய்துள்ளார்.

இந்த விவசாயி ஒரு ஹெக்டருக்கு ரூ.11 ஆயிரத்து 200-ஐ தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், ரூ.28 ஆயிரத்து 800-ஐ தோட்டக்கலை வளர்ச்சி வாரியத்தின் நிதியில் நுண்நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேலம் துணை இயக்குநர் அலுவலத்திலும் மானியமாக மொத்தம் ஒரு ஹெக்டருக்கு ரூ.40 ஆயிரம் பெற்று சாகுபடி செய்துள்ளார்.

மேலும் அவர் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட முழுவதும் நீரில் கரையக்கூடிய இரசாயன உரங்களை வேளாண்மைத்துறை மூலம் மானியமாக பெற்று குறிப்பிட்ட காலங்களில் நீர்வழி உரப்பாசனம் செய்தார். துல்லிய பண்ணையம் மூலம் கரும்பு பயிரிட்டதால் ஒரு ஹெக்டருக்கு 205 மெட்ரிக் டன் கரும்பு மகசூல் எடுத்துள்ளார்.

கரும்பு வயல் அறுவடை தின விழாவில் சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன், சேலம் வேளாண் துணை இயக்குநர்(மத்தியரசு திட்டங்கள்) ஜீ.உதயகுமார், ஏத்தாப்பூர் ஆமணக்கு மற்றும் மரவள்ளி ஆராய்ச்சி நிலயைத்தின் உதவி பேராசியர் (உழவியல்) கே.திருக்குமரன் மற்றும் துல்லிய பண்ணைய விவசாயிகள் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளின் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது . விவசாயின் சாதனையை அனைவரும் பாராட்டினர்.

இதுகுறித்து விவசாயி ராஜா கூறியது: கடந்த ஆண்டு இதே ரகம் கரும்பு சாதாரண முறையில் பயிரிட்ட போது 40 மெட்ரிக் டன் மட்டுமே மகசூல் கிடைத்தது. தற்போது துல்லிய பண்ணையம் முறையில் பயிரிட்டதால் ஏக்கருக்கு 82 மெட்ரிக் டன் மகசூல் கிடைத்துள்ளது என்றார்.

இதுகுறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் கூறியது:
சங்ககிரி வேளாண் உட்கோட்டத்தில் துல்லிய பண்ணையம் திட்டத்தின் மூலம் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் தொடர்ந்து அதிக மகசூலை பெற்று வருகின்றனர். இந்த திட்டத்தினை முறையாக மற்ற விவசாயிகளும் பயன்படுத்தினால் அதிக மகசூலை பெறுவதோடு நிகர லாபத்தினையும் அடைய முடியும் என்றார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 72.29 அடி**

First Published : 26 Mar 2010 07:04:33 AM IST

தஞ்சாவூர், மார்ச் 25: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 72.29 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,021 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**வாழை பதப்படுத்துதல், மதிப்பு கூட்டல் தேசிய கருத்தரங்கம் நாளை தொடக்கம்**

First Published : 26 Mar 2010 07:05:21 AM IST

திருச்சி, மார்ச் 25: திருச்சி ஸ்ரீசங்கரா கல்வி அறக்கட்டளையின் சார்பில், வாழை பதப்படுத்துதல் மற்றும் வாழையில் மதிப்பு கூட்டப்பட்ட உப பொருள்கள் தயாரிப்பு என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கம் சனிக்கிழமை (மார்ச் 27) தொடங்குகிறது.

இதுகுறித்து அறக்கட்டளையின் தலைவர் பி. சிவராமகிருஷ்ணன், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலர் ஜி. அஜீத்தன் ஆகியோர் வியாழக்கிழமை அளித்த பேட்டி:

வாழையிலிருந்து ஊறுகாய், ஜாம், வாழைப்பழ பவுடர், பிஸ்கட், கேக், ரொட்டி, வாழை பழச்சாறு, சிப்ஸ் போன்ற 25 வகையான மதிப்பு கூட்டப்பட்ட வாழை உப பொருள்களைத் தயாரிக்க முடியும். மேலும், பிளாஸ்டிக்

பொருள்களுக்கு மாற்றாக சுற்றுப்புற சூழ்நிலைக்கு கேடு விளைவிக்காத பை, கூடை, பொம்மைகள் போன்ற பல பொருள்களை நாரிலிருந்து தயாரிக்கலாம்.

தொழில் முனைவோர் எவ்வாறு வாழை சம்பந்தமான தொழில் தொடங்குவது குறித்து எடுத்துரைக்கும் வகையில், ஸ்ரீசங்கரா கல்வி அறக்கட்டளை, மத்திய உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் அமைச்சகம் ஆகியவை இணைந்து திருச்சியில் இரு நாள்கள் தேசியக் கருத்தரங்கத்தை நடத்துகின்றன.

திருச்சி ஜங்ஷன் வாசவி மகாலில் சனிக்கிழமை காலை நடைபெறும் விழாவில், மும்பை யெஸ் வங்கியின் உணவு மற்றும் வேளாண் வணிக ஆலோசகர் கல்யாணி சக்கரவர்த்தி கருத்தரங்கத்தைத் தொடக்கி வைக்கிறார்.

தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலர் ஜி. ரங்காராவ் கருத்தரங்குக்குத் தலைமை வகிக்கிறார். தேசிய வாழை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.எம். முஸ்தபா, முன்னாள் தலைமைச் செயலர் பி.என். வேதநாராயணன், தேசாய் வாழை ஏற்றுமதி நிறுவன நிர்வாக இயக்குநர் அஜித் தேசாய் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

முன்னோடி வாழை விவசாயிகள், தொழில்முனைவோர்கள், சுய உதவிக் குழுவினர், மத்திய, மாநில அரசு அலுவலர்கள், வங்கி மேலாளர்கள் பங்கேற்று கலந்துரையாட உள்ளனர்.

மார்ச் 28 ஆம் தேதி மாலை வாழையிலிருந்து புதிய உணவு வகைகள் தயாரிப்பு போட்டி மற்றும் செயல் விளக்கம் நடைபெறுகிறது என்றனர் அவர்கள்.

தினமலர்

**ஆண்டு முழுவதும் நெல் கொள்முதல் நிலையம் விவசாயிகள் சங்க மாநாட்டில் வலியுறுத்தல்**

அரியலூர்: அரியலூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு நடந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பு அமைப்பான, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், அரியலூர்-பெரம்பலூர் மாவட்ட 3 வது மாநாடு, அரியலூரில் நடந்தது. சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் உலகநாதன் தலைமையில் நடந்த இம்மாநாட்டில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வேணுகோபால், ஏ.ஐ.டி.யு.சி., மாவட்ட பொதுசெயலாளர் தண்டபாணி, திருமானூர் ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், பெரம்பலூர் பகுதி செயலாளர் ஞானசேகரன், தா.பழூர் ராமமூர்த்தி, ஜெயங்கொண்டம் ஜெயராஜ் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினார்கள். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட செயலாளர், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றிய இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தும் மின்வெட்டை கண்டிப்பதுடன், அரசு அறிவித்துள்ளபடி விவசாய பணிகளுக்கு, நாள்தோறும் 20 மணிநேரம் தடையற்ற மும்முனை மின்சாரம் வழங்கிட வேண்டும் என கேட்டு கொள்வது. ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்தை உடனடியாக தொடங்கி, வீட்டுக்கு ஒருவருக்கு வேலையும், நிலம் இழந்தோருக்கு ஏக்கர் ஒன்றுக்கு தலா 10 லட்ச ரூபாயும் வழங்கிட வேண்டும். அரியலூர் மாவட்டத்தில் துவங்கி செயல்படும் சிமெண்ட் ஆலைகளால் சுற்றுச்சூழல் மாசுபடாமல் Õதுகாக்கப்பட வேண்டும். வேப்பந்தட்டை தாலுகா, சின்னமுட்டுலு அணைகட்டு திட்டத்தை செயல்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பதுடன், விஸ்வகுடி நீர்த்தேக்க திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். பழுதாகியுள்ள அணைக்கரை கொள்ளிடம் பாலத்தை விரைவில் சீரமைத்து, அப்பாலத்தின் வழியாக பஸ்போக்குவரத்து ஏற்படுத்த வேண்டும். அரியலூர் அரசு மருத்துவமனையை மாவட்ட

தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி, அனைத்து அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட மருத்துவ வசதிகளை மேம்படுத்திட வேண்டும்.

அரியலூர்-பெரம்பலூர் அரசு மருத்துவமனைகளில் உயிர்காக்கும் உயர்நிலை சிறப்பு டாக்டர்களை பணியமர்த்த வேண்டும்.தஞ்சை மாவட்டத்தை போல, திருமானூர் மற்றும் தா.பழூர் ஒன்றியங்களில் ஆண்டு முழுவதும் நெல் கொள்முதல் நிலையங்களை செயல்படுத்திட வேண்டும். கொள்ளிடம் மற்றும் மருதையாற்றில் கதவுடன் கூடிய தடுப்பணை கட்டி, நிலத்தடி நீர் ஆதாரத்தை பாதுகாத்திட வேண்டும். விவசாயிகளின் விலைபொருட்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடு இன்றி பயிர்கடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் சங்கத்தின் புதிய மாவட்டக்குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**உற்பத்தியை நிறுத்த விசைத்தறியாளர்கள் முடிவு: பருத்தி விலை உயர்வால் கடும் பாதிப்பு**

சோமனூர்: விசைத்தறி ஜவுளி உற்பத்தி தொழிலில் மீண்டும்  விலை உயர்வு பிரச்னை தலை தூக்கியுள்ளது. உயர்ந்து வரும் பஞ்சு மற்றும் நூல் விலைக்கேற்ப, துணி விலை உயராமல் ஜவுளி உற்பத்தியாளர்கள் கவலை யடைந்துள்ளனர்.

சோமனூர், கருமத்தம்பட்டி, சாமளாபுரம், சூலூர், அவிநாசி, பல்லடம், மங்கலம் சுற்றுப்பகுதிகளில் இரண்டு லட்சம் விசைத்தறிகள் உள்ளன.  இந்த விசைத்தறிகளில் உற் பத்தியாகும் காடா துணிகளுக்கு மூலப் பொருளான நூல் ரகங்களின் விலை கடுமையாக உயர்ந் துள்ளது. ரக வாரியாக மூட்டைக்கு 400 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் விலை உயர்ந்துள்ளது.   இந்த விலை உயர்வுக்கு ஏற்ற வகையில் உற்பத்தியாகும் துணி விலைகளில் மாற்றம் இல்லை. இதனால், உற்பத்தியாகும் ஒவ்வொரு மீட்டர் துணிக்கும் நஷ்டம் அதிகரித்து வருகிறது. இது குறித்து சோமனூரைச் சேர்ந்த ஸ்பின்னிங் மில் அதிபர் தங்கவேல் கூறியதாவது; மத்திய அரசு பஞ்சு ஏற்றுமதியை அதிகரித்து வருகிறது. உள்நாட்டில் பஞ்சு தேவைக்கேற்ற அளவில் கிடைக்காமல் கடுமையாக விலை உயர்ந்துள்ளது.

இதைக் கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 'ஆன்-லைன்' வர்த்தகத்தில், தொழிலில் தொடர்பில்லாதவர்கள் கோடி ரூபாய்க்கு பஞ்சு ரகங்களை வாங்கி இருப்பு வைக்கின்றனர்.  உள்நாட்டு மார்க்கெட்டில் பஞ்சுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பஞ்சு 40 ரக நூல் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 365 கிலோ எடையுள்ள கண்டி, கடந்த வாரம் 27,500 ரூபாய் விற்றது  29,500 ஆகவும், 30 ரகம் உற்பத்திக்குப் பயன்படும் பஞ்சு 28,000 லிருந்து 30,000 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.  இரண்டு ஆண்டுகளுக்கு முன் 20,000 ரூபாய்க்கும் குறைவாக விற்கப்பட்ட பஞ்சு, 30 சதவீதம் விலை அதிகரித்துள்ளது. நாட்டில் பருத்தி உற்பத்தி தேவையான அளவு உள்ளது.  உள்நாட்டில் ஜவுளி மில்களில் நூல் ரகங்களின் தேவை அதிகரித்துள்ளது. நமது மில்களின் தேவையைப் பூர்த்தி செய்தது போக மீதத்தை ஏற்றுமதி செய்தால் இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜவுளி உற்பத்தி மற்றும் நூல் ஏஜன்ட்டுகள் தரப்பில் கூறியதாவது: நூல் ரகங்கள் கடந்த வாரத்தை விட விலை அதிகரித்துள்ளது. 40 ரகம் மூடை 50 கிலோ எடையுள்ள மூட்டை 6,500 ரூபாய்க்கு விற்றது 7,100 ஆகவும், வார்ப் நூல் 7,500 லிருந்து 8,500 ரூபாயாகவும், 30 ரகம் வார்ப் 6,500 லிருந்து  7,200 ஆகவும் விற்றது. வெப்ட் நூல் 6,100லிருந்து 6,400 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. அதே போல, 20 ரகம் வெப்ட் நூல் 4,000 லிருந்து  4,500 ஆகவும்,  25 ரகம் வார்ப் நூல் 6,300 லிருந்து 6,700 ஆகவும் உயர்ந்தது. 60 ரகம் வார்ப் நூல் 10,000 லிருந்து 11,000 ஆகவும், வெப்ட் நூல் 8,000 லிருந்து 9,200 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.  விலை உயர்வுக்கு ஏற்ப உற்பத்தியாகும் துணி ரகங்கள் விலை உயரவில்லை. அந்த வகையில் உற்பத்தியாகும் துணிக்கு ரக வாரியாக மீட்டருக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை நஷ்டமாகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித் தனர்.

உற்பத்தி நிறுத்த முடிவு: சோமனூர் சொந்த விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்க செயலர் முருகசாமி கூறிய தாவது: சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டத்தில் நூல் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள பிரச்னை குறித்து விவாதிக்கப்பட்டது. நூல் விலை உயர்வுக்கு ஏற்ற அளவில் துணி விலை உயராமல், நஷ்டம் அதிகரிக்கும் நிலை குறித்து ஆலோசிக்கப்பட்டது. முடிவில் ஏப்ரல் 5ம் தேதி சங்கத்துக்கு உட்பட்ட விசைத்தறி கூடங்களில் துணி உற்பத்தியை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வரும் 5ம் தேதி முதல் வேறு வழியில்லாமல் துணி உற்பத்தி நிறுத்தப்படும். இவ்வாறு செயலர் முருகசாமி கூறினார்.

**தடுப்பணையில் நீர் இல்லாததால் உயிரினங்கள் தவிப்பு : பாதுகாக்க வனத்துறை நடவடிக்கை தேவை**

கொடைக்கானல் : வன உயிரினங்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரங்களில், நீர் குறைந்து விட்டதால் அவற்றை பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கொடைக்கானல் மலைப்பகுதியில் 40 ஆயிரம் எக்டேர் வனப்பகுதி உள்ளது.யானைகள், காட்டெருமை, மான், புலி, சிறுத்தை உட்பட பல் வேறு விலங்கினங்கள் இங்கு வாழ்கின்றன.இவைகளுக்கு தேவையான உணவு, குடிநீர் இயற்கையாக கிடைத்தாலும், மழை இல்லாத காலங்களில் விலங்குகள் பாதிக்கப்படாத வகையில் அவற்றை காப்பாற்றுவதற்காக ஆங்காங்கே தடுப்பு அணைகள் கட்டப்பட்டு தண்ணீர் சேகரிப்பட்டன.
கடந்த ஆண்டு வரை வன உயிரினங்களுக்கு தடுப்பணைகள் முக்கிய குடிநீர் ஆதாரமாக இருந்தது.இந்த ஆண்டு மழையின்மை, சுட்டெரிக்கும் வெயிலால் வனப்பகுதி முழுவதும் வறண்டு காணப்படுகிறது. பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் வறண்டு வருவதால் தண்ணீர் தேங்குவதற்காக கட்டப்பட்ட தடுப்பணைகளும் புதர் மண்டி காணப்படுகிறது.வனப்பகுதியில் குடிக்க தண்ணீர் கிடைக்காததால் வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்கு வரும் அபாயம் எழுந்துள்ளது
மாவட்ட வன அலுவலர் வெங் டேஷ் கூறுகையில்,' வனப்பகுதியிலுள்ள நீர்வீழ்ச்சி,நீர்தேக்கங்களில் போதிய தண்ணீர் உள்ளதால், விலங்குகள், வனத்தை விட்டு வெளியேறுவதில்லை. நகர்பகுதியை யொட்டியுள்ள வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வறண்ட தடுப்பு அணைகளில் தேவைக்கு ஏற்ப டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்யப்படும்' என்றார்.

**பயிர் சேதம் இழப்பீடு தொகை ரூ.37.08 லட்சம் வழங்கல்**

கரூர்: 'கடந்த 2008ல் பருவமழையில் பாதிக்கப்பட்ட பயிருக்கு, 37 லட்சத்து 8,432 ரூபாய் இழப்பீட்டுத்தொகை அரசு வழங்கியுள்ளதாக' கலெக்டர் உமாமகேஸ்வரி கூறினார். விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் உமாமகேஸ்வரி தலைமையில் கரூரில் நடந்தது. கூட்டத்தில் வேளாண் விரிவாக்க மையம் கட்டுதல், வாய்க்கால் தூர்வாருதல், துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியத்தொகை வழங்குதல், விவசாய கடனுதவி, பஸ் வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் அளித்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கலெக்டர் உறுதியளித்தார்.

கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது: கரூர் மாவட்டத்தில் 2008 நவ.,ல் பெய்த பருவமழை காரணமாக ஏற்பட்ட பயிர் சேதத்துக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகத்தால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதனடிப்படையில் மாவட்டத்துக்கு பயிர் இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. 154.40 ஹெக்டர் பரப்பிலான நெற்பயிருக்கு 11 லட்சத்து 58,000 ரூபாய், 637.60 ஹெக்டர் பரப்பிலான கரும்பு, வாழை உள்ளிட்ட இதர பயிருக்கு 25 லட்சத்து 50,432 ரூபாய் இழப்பீடாக அரசு வழங்கியுள்ளது. இத்தொகை உரிய விவசாயிகளுக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இதன் மூலம் ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் பயனடைவர். இவ்வாறு அவர் பேசினார். டி.ஆர்.ஓ., முனிரத்தினம், வேளாண் இணை இயக்குனர் ஜெகதீசன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர்

உமாமகேஸ்வரி, கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்) கந்தசாமி, முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டி ஒன்றியம் வெள்ளாளபட்டியில் நிலக்கடலை சாகுபடி பயிற்சி நடந்தது. விதை உற்பத்தி, நிலக்கடலை சாகுபடி, அறுவடைக்குப்பின் மேற்கொள்ளவேண்டிய தொழில்நுட்பங்கள், விதை சேமிப்பு மற்றும் வேளாண் திட்டங்கள் குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது. கொட்டாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டி, வேளாண் அலுவலர் ரவி, துணை வேளாண் அலுவலர் ஆதீஸ்வரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**தூசூர் ஏரி பாசன நிலத்தில் விளைந்த எருக்கன் செடிகள்**

நாமக்கல்: ஆண்டு முழுவதும் பச்சைப்பசேல் என காணப்பட்டு வந்த தூசூர் ஏரிக்கரையை ஒட்டியுள்ள விளைநிலங்கள், மழை பொழிவில்லாததால், எருக்கன் செடிகள் முளைத்திருப்பது விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. நாமக்கல்-துறையூர் சாலையில் தூசூர் எனும் இடத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி மாவட்டத்தில் மிகப் பெரியது. ஏரியின் மூலம் பல நூறு ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெறுகிறது. ஏரி ஒட்டியுள்ள கிணறுகளில் விவசாயத்துக்கு ஏற்றவாறு தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். ஏரிக்கரை ஓரம் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

காலநிலை மாற்றத்தால் நாமக்கல் மாவட்டத்தில் பருவமழை பொய்த்தது. பாசன வசதியளித்து வந்த ஏரி, கிணறு உள்ளிட்ட கண்மாய்கள் அனைத்தும் வறண்டு பாலைவனமாக காட்சியளிக்கின்றன. வறட்சியின் கோரப்பிடிக்கு தூசூர் ஏரியும் தப்பவில்லை. ஏரி முழுவதும் வறண்டு, வெடித்து காணப்படுகிறது.

அதன் எதிரொலியாக ஆண்டு முழுவதும் பச்சை பசேல் என காணப்பட்டு வந்து ஏரிக்கரையை ஒட்டி உள்ள விளைநிலங்கள் காய்ந்து கருகியுள்ளன. மழையை எதிர்பார்த்து உழவு செய்யப்பட்ட விளைநிலங்களில் எருக்கன் செடிகள் முளைத்து பரிதாபமாக காட்சியளிப்பது விவசாயிகளை மட்டுமின்றி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

**பழங்குடி கிராமத்தில் 'சாண எரிவாயு' திட்டம்: தொண்டு நிறுவனம், லண்டன் குழு ஏற்பாடு**

பந்தலூர்: வெப்பமயத்தை கட்டுப்படுத்தவும், எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவும், பழங்குடியினர் மத்தியில் முதன்முறையாக சாண எரிவாயு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பசுமையான வனங்களை அழித்தல், சுற்றுப்புற சுழலை மாசுபடுத்துதல், பெருகி வரும் தொழிற்சாலைகள், நீராதாரங்களை சேதப்படுத்துவது உட்பட பல காரணங்களால், நாளுக்கு நாள் பிரச்னை அதிகரித்து வருகிறது; காலநிலை மாறி, வெயில் சுட்டெரித்து வருகிறது. உலக வெப்பமயமாதலால் ஏற்படும் பாதிப்பு குறித்து, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டும், இயற்கைக்கு எதிரான செயல் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்நிலையில், வெப்பமாதலை கட்டுப்படுத்தவும், சமையல் எரிவாயு பிரச்னையை நிவர்த்தி செய்யவும், பழங்குடியினர் மத்தியில் முதன்முறையாக சாண எரிவாயு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பந்தலூர் அடுத்துள்ள ஏலமன்னா சி.டி.ஆர்.டி., வளாகத்தை ஒட்டிய பனியர் இன பழங்குடியினர் கிராமத்தில், சி.டி.ஆர்.டி., நிறுவனம் மற்றும் லண்டனை சேர்ந்த தன்னார்வலர்கள் இணைந்து, திட்டத்தை செயல்படுத்தியுள்ளனர். முதலில், ஏலமன்னா பழங்குடியினர் கிராமத்தில், 7 வீடுகள் பயன்பெறும் வகையில், 6 பசு மாடுகளை கொண்டு திட்டம்

துவக்கப்பட்டுள்ளது. இதற்காக கிராமத்தின் மையப்பகுதியில் மாட்டுத் தொழுவம், இதன் அருகில் எரிவாயு உற்பத்தி கிடங்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2.25 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம், படிப்படியாக 30 கிராமங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சி.டி.ஆர்.டி., பணியாளர்களுடன் லண்டனை சேர்ந்த திட்ட மேலாளர்கள் ஜேம்ஸ், பிரியா ரீட்டா மேற்பார்வையில் 16 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சி.டி.ஆர்.டி., இயக்குனர் ரங்கநாதன் கூறுகையில், "பழங்குடியினர் மத்தியில் எரிவாயு பயன்படுத்துவது குறித்து பயிற்சி ளிக்கப்பட்டு சாண எரிவாயு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் விறகுக்காக வனங்கள் அழிப்பது கட்டுப்படுத்தப்படுவதுடன், கால்நடைகளை கொண்டு பொருளாதார வளர்ச்சியும் மேம்படும். எரிவாயு தயாரிக்கும் போது கிடைக்கும் சாணக் கழிவு, சிறந்த இயற்கை உரமாகவும் பயன்படுகிறது. இதனால், எரிவாயு தயாரிப்பு, வனங்கள் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, இயற்கை உரம் என நான்கு வகை பயன்கள் கிடைக்கிறது. ஏலமன்னா கிராமத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டம், ஒவ்வொரு கிராமங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்," என்றார். சாண எரிவாயு திட்டம், பழங்குடியினர் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது.

**அதிகளவில் வெங்காயம் சாகுபடியால் பெரம்பலூரில் குளிர் கிடங்கு: கலெக்டர்**

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் வெங்காயம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுவதால் குளிர் கிடங்கு விரைவில் அமைக்கப்படும்," என கலெக்டர் விஜயகுமார் தெரிவித்தார்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டம் சார்பில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கூட்ட அரங்கில் நடந்த மாவட்ட அளவிலான வெங்காய சாகுபடி கருத்தரங்கத்தை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, வெங்காய சாகுபடி குறித்த கையேட்டினை வெளியிட்டு கலெக்டர் விஜயகுமார் பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் 7,000 ஏக்கருக்கு மேல் வெங்காயம் சாகுபடியாகிறது. வெங்காய சாகுபடியில் அதிக விளைச்சல் பெறவும், புழு, பூச்சிகளிடமிருந்து இப்பயிரினை காத்துக்கொள்வது தொடர்பாக வல்லுநர்களை கொண்டு பயிற்சி வழங்கப்படுகிறது. விவசாயிகள் உங்களுடைய சந்தேகங்களை இப்பயிற்சி வகுப்பின் மூலம் தீர்வு செய்தும், அதிக விளைச்சல் பெறும் விவசாயிகள் உங்களின் நுணுக்கங்களை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

வெங்காயத்தை சேமித்து வைப்பதற்கு குளிர் கிடங்கு அமைக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க ஐந்து ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வெங்காயத்தை சேமித்து வைக்கும் குளிர் கிடங்கு அமைக்கப்படும். தமிழக அரசு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தால்தான் நாடு முன்னேற்றமடையும். பசுமை புரட்சியினால் நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஒடைந்தது. அரசு வேளாண் விரிவாக்கப்பணிகளை சீர்திருத்தம் செய்வது முக்கியம் என கருதி 1998ம் ஆண்டில் மாவட்ட அளவில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை எனும் அமைப்பை ஏற்படுத்தி புதிய திட்ட நடைமுறைகளை சோதனை அடிப்படையில் நாடு முழுவதும் சில மாவட்டங்களில் செய்தது.

அதன் வெற்றியை தொடர்ந்து நமது மாநிலத்தில் 2007-2008ம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் ஆத்மா திட்டம் நடைமுறைக்கு வந்தது. 2007-08 முதல் 2009-10 வரை ஆத்மா திட்டத்திற்காக 76 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் நிதி பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். பயிற்சியில் வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை திட்ட இயக்குநர் ராதாகிருஷ்ணன், தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் நீல்ராஜ், துணை இயக்குநர்கள் சிவக்குமார், விஜயகுமார் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**கூடுதல் விலையால் சந்தன கட்டை ஏலம் 'புஸ்...'**

சேலம்: சேலம் சந்தன குடோனில் விலை கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டதால், ஏலத்துக்கு வைக்கப்பட்ட 150 டன் சந்தன கட்டைகளை வியாபாரிகள் ஏலம் எடுக்காமல் சென்றனர்.

சேலம் அஸ்தம்பட்டியில் வனத்துறைக்கு சொந்தமான சந்தன குடோன் உள்ளது. இங்கு பல்வேறு வகையான சந்தன கட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இந்த சந்தன கட்டைகள் நேற்று ஏலத்துக்கு விட தயார் நிலையில் வைக்கப்பட்டது. தமிழ்நாடு வனத்துறை தலைமை கூடுதல் தலைவர் பெருமாள் தலைமை வகித்தார். கன்ஸர்வேட்டர் பழனி, மாவட்ட வன அலுவலர் கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்த சந்தன வியாபாரிகள் மற்றும் சந்தன எண்ணெய் ஆலை அதிபர்கள் ஏலத்தில் பங்கேற்றனர். சந்தன குடோனில் ரூட் முதல், இரண்டாம், மூன்றாம் தரம், ஜர்ஜ்போகல் முதல், இரண்டாம் தரம், செரியா, பசலோ பக்னி உள்பட 11 வகையான 150 டன் சந்தன கட்டைகள் ஏலத்துக்கு வைக்கப்பட்டன.சந்தன கட்டைகள் தரத்துக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்து ஏல தொகை அறிவிக்கப்பட்டது. கூடுதல் விலை நிர்ணயம் செய்து சந்தன கட்டைகள் ஏலம் விடப்பட்டதால், வியாபாரிகள் ஒருவரும் சந்தன கட்டை ஏலம் எடுக்காமல் மவுனமாக அமர்ந்து இருந்தனர். ஏல தொகை கடந்த முறை சந்தன கட்டைகள் ஒரு டன் 50 லட்சம் ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது, தற்போது 60 லட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்து இருந்தது.

இது குறித்து தமிழ்நாடு வனத்துறை தலைமை கூடுதல் தலைவர் பெருமாள் கூறியதாவது: சந்தன கட்டைகள் ஏற்றுமதி செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. அதனால், சந்தன கட்டைகள் ஏலம் எடுப்பதில் வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். சந்தன கட்டைகள் ஏலத் தொகை கூடுதலாக நிர்ணயம் செய்து இருப்பதாக தெரிவித்து, வியாபாரிகள் சந்தன கட்டைகளை ஏலம் எடுக்கவில்லை. இது குறித்து அரசு கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். வனத்துறை பகுதியில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதை கண்காணிக்க தீ தடுப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது. வனப்பகுதியில் தீ சம்பந்தப்பட்ட பொருட்களை எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊட்டியில் காட்டில் தீ வைத்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வனப்பகுதியில் தீ வைக்கும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வனத்துக்கு தீ வைப்பவர்கள் மீது ஆறு மாத சிறை தண்டனை விதிக்கும் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர், என்றார்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்பதால் தவிப்பு : கடைக்காரர்கள் மீது சட்டம் பாயுமா?**

சிவகங்கை : மொத்த, சில்லரை உர விற்பனை கடைகளில் அரசு நிர்ணயித்த விலைகளை விட முறைகேடாக கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதால், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.
மாவட்டத்தில், 1.17 லட்சம் எக்டேர் நிலத்தில் விவசாய பணிகள் நடக்கிறது. விவசாய பணிகளுக்கு தேவைப்படும் உரங்களை 15 மொத்த, 289 சில்லரை உரக்கடைகளில் விவசாயிகள் வாங்குகின்றனர். ஆண்டிற்கு, 41 ஆயிரம் டன் உரங்கள், 20 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
கூடுதல் விலைக்கு விற்பனை: இங்கு யூரியா மூடை (50 கிலோ) 251.16 ரூபாய், டி.ஏ.பி.,- 486.20, பொட்டாஷ் - 231.66, சூப்பர் பாஸ்பேட் - 176.80 ரூபாயக்கும் மற்றும் காம்பளக்ஸ் உரங்களை அரசு நிர்ணயித்த விலைக்கும் விற்கவேண்டும். கடைகள் முன் இருப்பு விபரம், அரசு நிர்ணயித்த விலை விபரங்களை எழுத வேண்டும். ஆனால், அவற்றை எழுதாமல், உரங்கள் தட்டுப்பாடாக இருப்பது போல், காண்பித்துக்கொண்டு, விவசாயிகளிடம் மூடைக்கு நூறு ரூபாய் வரை பல உரக்கடைகளில் கூடுதலாக வசூலிக்கின்றனர். இதற்கென பில்லும் தருவதில்லை. இவற்றை, தடுக்கவேண்டிய உர கட்டுப்பாடு, விவசாய அலுவலர்கள் கண்டும் காணாமல் செல்வதால், விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்.
சத்துக்களை பொறுத்து மானியம்: மத்திய அரசு, விவசாயிகள் பயன்படுத்தும் உரத்திற்கு சத்துக்களின் அடிப்படையில், மானியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது. இந்த மானிய விலை ஏப்.,1 முதல் அமலுக்கு வரும். எனவே, மானியம்

வழங்கப்பட்ட பின் சத்துக்களின் அடிப்படையில் உரத்தின் விலை குறையவோ, கூடவோ செய்யலாம். எனவே ஏப்.,1க்கு பின் கடைகளுக்கு முன், பழைய மற்றும் புதிய உரங்களின் இருப்பு, விலை விபரங்களை கட்டாயம் எழுதி வைக்கவேண்டும். கூடுதல் விலை வசூலிக்காமல், உரக்கட்டுப்பாடு, விவசாய அலுவலர்கள் கண்காணிக்கவேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை எழுந்துள்ளது.
விவசாயத்துறை இணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன் கூறியதாவது: ஏப்.,1 முதல் உரங்களுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது. எனவே இருப்பில் உள்ள உரங்களை, புதிய விலைக்கு விற்றாலோ, உரங்களை பதுக்கி கள்ளச்சந்தையில் விற்றால் கடை லைசென்ஸ் ரத்து செய்யப்படும். ஒவ்வொரு கடைகளிலும் இருப்பில் உள்ள பழைய உரங்களின் விபரங்களை வாங்கியுள்ளோம். விவசாயிகள் உரங்களை பில்லுடன் வாங்கவேண்டும். பழைய உரத்தை கூடுதல் விலைக்கு விற்பது தெரியவந்தால், குற்ற நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**மண் புழு திடல் அமைக்க மானியம்**

சிங்கம்புணரி : சிங்கம்புணரி ஒன்றியத்தில், நீர், நிலவள திட்டத்தின் கீழ், தரிசு நிலத்தில் மண்புழு மாதிரி திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.
'சில் பாலிங்' முறையில் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு, எக்டேருக்கு 5,000 ரூபாய் மானியம் கிடைக்கும். மக்காச் சோளம் பயிரிடுவோருக்கு, எக்டேருக்கு 4,000 ரூபாய் மதிப்பில் விதை, இடுபொருட்கள் வழங்கப்படும். வம்பன் உளுந்து 80 எக்டேரில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எக்டேருக்கு 1,500 ரூபாய் மானியம் வழங் கப்படும். கடலை பயிரிடுவோருக்கு எக்டேருக்கு, 4,000 ரூபாய் மானியம் கிடைக் கும். நீர் பாசன வசதியுள்ள விவசாயிகள் மட்டும் தொடர்பு கொள்ளுமாறு, உதவி இயக்குனர் தொல் காப்பியன் தெரிவித்துள்ளார்.

**வெங்காய விளைச்சல் அமோகம் : விலை சரிவு; விவசாயிகள் புலம்பல்**

காளையார்கோவில் : காளையார்கோவிலில் சின்ன வெங்காயம், அமோக விளைச்சல் கண் டுள்ள நிலையில், விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர்.
மரக்காத்தூர்,சானாவூரணி, வேளாங்குளம், மந்திக்கண்மாய், பருத்திக் கண்மாய், பள்ளித்தம்மம் உள்ளிட்ட கிராமங்களில், கடலை சாகுபடியில் ஊடுபயிராக, சின்ன வெங்காயம் பயிரிட்டுள்ளனர். பராமரிப்பு செலவு குறைவு என்பதால், விவசாயிகள், வெங் காய சாகுபடியில் ஆர்வம் காட்டினர். ஏக்கருக்கு 500 கிலோ வரை மகசூல் கிடைத்துள்ளது. நடப்பு ஆண்டு அமோக விளைச்சல் இருப்பதால், கொள்முதல் விலை சரிந்துள்ளது. விலை நிர்ணயம் இல் லாததால், மகசூல் அதிகரிக்கும் போது விலை குறைவதும்; உற்பத்தி குறையும் போது, விலை அதிகரிப்பதும் வழக்கமாக உள்ளது. ஒரு கிலோ 10 ரூபாய் என்ற விலையில், இடைத்தரகர், வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.
இதுகுறித்து சாணாவூரணி செங்கோல்ராஜ் கூறுகையில், "ஒரு கிலோ 45 ரூபாய்க்கு விதை வாங்கி, ஊடுபயிராக நடவு செய்தேன். நல்ல மகசூல் கிடைத்துள்ளது. ஆனால், 10 ரூபாய்க்கு தான் வாங்குகின்றனர். இதில் 10 சதவீதம் கமிஷன் எடுத்து விடுகின்றனர். எடையும் சரியாக இருப்பதில்லை. இதனால் செலவு செய்த பணம் கூட திரும்ப கிடைக்கவில்லை," என்றார்.
விவசாயிகளின் நஷ்டம் அடைவதை தவிர்க்க , அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நேரடி கொள்முதல் செய்ய அரசை, மக்கள் பிரதிநிதிகள் வலியுறுத்த வேண்டும்.

**விவசாயிகள் சங்க மாநாடு**

திருவாரூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு திருவாரூரில் 2 நாட்கள் நடந்தது.முதல் நாள் மாநாட்டிற்கு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் சிவஞானம் தலைமை வகித்தார்.

முன்னாள் செயலாளர் திருஞானசம்பந்தம், மாநில பொதுச்செயலாளர் துரைமாணிக்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நடந்த மாநாட்டில் எம்.எல்.ஏ.,க்கள் உலகநாதன், பத்மாவதி, மாவட்ட பொருளாளர் ஏ.ஏஸ்.பாண்டியன், ஒன்றியக்குழு தலைவர்கள் கோட்டூர் பி.ஆர்.பாண்டியன், மன்னார்குடி பாஸ்கரவள்ளி, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார். திரைப்பட நடிகை ரோகிணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதன்படி மாவட்டத் தலைவராக சேரன், செயலாளராக மாசிலாமணி, துணைத் தலைவராக வீரமணி, துணைச் செயலாளர்களாக பி.ஆர்.பாண்டியன், சிவஞானம், பொருளாளராக ஏ.எஸ்.பாண்டியன் மற்றும் 15 பேர் கொண்ட நிர்வாகக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளர் மாசிலாமணி வரவேற்றார். வரவேற்புக்குழு பொருளாளர் கேசவராஜ் நன்றி கூறினார்.

**வத்தல் விலை குறைவு**

சத்திரப்பட்டி : மிளகாய் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது.
சத்திரப்பட்டி, கோபாலபுரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் மிளகாய் பயிரிட்டுள்ளனர். தற்போது அறுவடை நடந்து வரும் சூழ்நிலையில், விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கோபாலபுரம் விவசாயி குழந்தைவேல் கூறியதாவது: ஜனவரி, பிப்ரவரியில் குவிண்டால் மிளகாய் வத்தல் விலை 5,000ரூபாயாக இருந்தது. தற்போது வரத்து அதிகரித்துள்ளதால், ஒரு குவிண்டாலின் விலை 4,000 ரூபாயாக குறைந்துவிட்டது, என்றார்.

**வெள்ளாடு வளர்ப்பு திட்டத்துக்கு ரூ.18 லட்சம்: துணைவேந்தர் தகவல்**

திருப்பூர்: கிராமப்புற பெண்களுக்கு வெள்ளாடு வழங்கும் சிறப்பு முகாம், திருப்பூர் கால்நடை மருத்துவமனையில் நேற்று நடந்தது. கால்நடை ஆராய்ச்சி மற்றும் பல்கலை சார்பில் ரோட்டரி மற்றும் லயன்ஸ் கிளப் உதவியுடன் இலவச வெள்ளாடுகள் வழங்கும் முகாம் நடத்தப்பட்டன.

இத்திட்டத்தில், மாவட்டம் முழுவதும் இதுவரை 503 பேருக்கு வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. காரமடையை அடுத்த பொன்னேரி, ஆலங்கட்டி, ஆலங்கட்டிபுதூர், தீங்குளி ஆகிய பகுதிகளைச் சார்ந்த மலைவாழ் பெண்களுக்கு 50 வெள்ளாடுகள் நேற்று வழங்கப்பட்டன. இத்திட்டத்துக்கு கால்நடை பல்கலையில் இருந்து 18 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, கோவை கால்நடை பல்கலை துணைவேந்தர் தங்கராஜ் தெரிவித்தார். இத்தொகையை பயன் படுத்தி, அடுத்த மூன்று மாதங்களில் 350 பேருக்கு வெள்ளாடு, 100 ஏழை பண்களுக்கு கோழிகள் வழங்கப்பட உள்ளன. திருப்பூர் மாவட்ட கால்நடை துறை மண்டல இயக்குனர் (பொ) மகேந்திரன், உதவி இயக்குனர் பிரான்சிஸ் சாமுவேல் மோகன், கால்நடை பல்கலை தலைவர் செல்வராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.56 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

அவிநாசி: அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்தில் ரூ.56 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.
அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 5,000 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 1,000 மூட்டை குறைவு. வரத்து குறைந்துள்ள நிலையிலும், எல்.ஆர்.ஏ., ஆர்.சி.எச்., பென்னி ரகங்கள் விலை அதிகரித்துள்ளன. ஆர்.சி.எச்., விலையில் மாற்றமில்லை.

இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,200 முதல்

ரூ.3,450 வரை, டி.சி.எச்., ரூ.4,100 முதல் ரூ.4,800 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,300 முதல் ரூ.3,620 வரை, மட்டம் ரூ.1,750 முதல் ரூ.2,000 வரை. அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: இந்த வார பருத்தி ஏலத்துக்கு கடந்த வாரத்தை விட வரத்து சற்று குறைந்துள்ளது. திண்டுக்கல், பென்னாகரம், திருப்பத்தூர், உடுமலை, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தியை கொண்டு வந்திருந்தனர். வரத்து குறைந்துள்ள நிலையிலும் எல்.ஆர்.ஏ., குவிண்டாலுக்கு ரூ.100, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரகங்கள் குவிண்டாலுக்கு ரூ.50 அதிகரித்திருந்தது. டி.சி.எச்., விலையில் எந்த மாற்றமும் இல்லை. இந்த வாரம் ரூ.56 லட்சத்துக்கு மேல் வர்த்தகம் நடந்தது, என்றார்.

**எதிரிகளை அதிர வைக்கும் 'மிளகாய் குண்டு' : இந்திய ராணுவத்தில் அறிமுகம்**

*மார்ச்* 26,2010,00:00 IST

---



சென்னை, பரங்கிமலை, ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் கலந்து கொள்ள வந்த ராணுவ ஊழியர்களுக்கான துணை தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் பரத்வாஜ் கூறுகையில், 'உலகின் அதிநவீன ஆயுதங்கள் கூட தற்போது இந்திய ராணுவத்தில் உள்ளது' என்றார். இந்நிலையில், உள்நாட்டிலேயே கிடைக்கும் சாதாரண மிளகாயும் ஆயுதமாக மாறி, தற்போது இந்திய ராணுவத்திற்கு பெரும் உதவி செய்ய உள்ளது.

வட மாநில சமையலில் அதிகமாக பயன்படுத்தப்படும் 'பூட் ஜோலோகியா' என்றழைக்கப்படும் ஒருவகை மிளகாய், கட்டை விரல் அளவில் தான் இருக்கும். வடகிழக்கு மாநிலங்களில் அதிகமாக விளைகிறது. இந்த வகை மிளகாய் உலகிலேயே மிகவும் காரம் அதிகம் கொண்டது. இதன் காரத்தன்மை அதிகமாக இருப்பதால், அதற்கு 'பேய் மிளகாய்' (கோஸ்ட் சில்லி) என்று பெயர் விளங்குகிறது. உலகிலேயே அதிக காரத்தன்மை கொண்ட மிளகாய் என்று இந்த மிளகாய், 'கின்னஸ் வேர்ல்டு ரெக்கார்டு' புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது. காரத்தின் அளவை அளக்கும் முறையின் கீழ் சோதனை செய்யப்பட்டதில், முதல் தர புகையிலையின் சாறு 2 ஆயிரத்து 500 முதல் 5 ஆயிரம் யூனிட் காரம் கொண்டது. ஜலபினோ மிளகு 2 ஆயிரத்து 500 முதல் 8 ஆயிரம் யூனிட் காரம் உடையது. ஆனால், பூட் ஜோலோகியா மிளகாயோ ஒரு லட்சத்திற்கும் அதிகமான யூனிட் கார சுவை கொண்டது.

தற்போது, பயங்கர கார சுவை கொண்ட பூட் ஜோலோகியா மிளகாயை, ஒரு ஆயுதமாக மாற்றி, பயங்கரவாதத்திற்கு எதிராக பயன்படுத்த இந்திய ராணுவம் முடிவு செய்துள்ளது. இந்த வகையில், மிளகாய் கையெறி குண்டு தயாரிக்கும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. 'கண்ணீர் புகையை போல கையெறி குண்டாக இந்த மிளகாயை பயன்படுத்தி எதிரிகளை செயலிழக்கச் செய்யலாம்' என்று பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறுகின்றனர். அசாமில் உள்ள ராணுவ பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆய்வகத்தில் விஞ் ஞானிகளால் தற்போது மிளகாய் எறிகுண்டு தயாரித்து பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பூட் ஜோலோகியா மிளகாயால் தயாரிக்கப்படும் கையெறி குண்டு, நஞ்சு கலக்காத ஒரு ஆயுதம் என்று உறுதியாக கூறலாம். மிளகாய் எறிகுண்டை வீசும் போது வெளிப்படும் கார நெடி, பயங்கரவாதிகளை மிகுந்த எரிச்சலடைய செய்து, அவர்களை மறைவிடத்தில் இருந்து வெளியே வரவழைத்து விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பெண்கள் மீது தற்போது அதிகளவில் தாக்குதல்கள் நடக்கின்றன. தங்களை தாக்குபவர்களை தடுக்கும் வகையில் பெண்கள் பயன்படுத்துவதற்கும், கும்பலை கலைக்க போலீசாருக்கு உதவும் வகையிலும், பூட் ஜோலோகியா மிளகாய் 'ஸ்பிரே'க்கள் தயாரிப்பது தற்போது ஆய்வு நிலையில் உள்ளது. ஆனால், சென்னை மாநகர போலீசார், தனியாக நடந்து செல்லும் பெண்களிடம் வழிப்பறி செய்பவர்களிடம் இருந்து தப்பிக்க மிளகாய் ஸ்பிரேயை பயன்படுத்தலாம் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதை தற்போது செயல்படுத்தியும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**- நமது சிறப்பு நிருபர் -**

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***பாலக்காடு அருகே வாழைத்தோட்டத்துக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் விவசாயிகள் கவலை***

*பாலக்காடு, மார்ச்.26–*

*பாலக்காடு அருகே வாழைத்தோட்டத்துக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்தன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.*

*வெயில் கொளுத்துகிறது*

*கேரள மாநிலத்தில் கோடை வெயில் கொளுத்துகிறது. தற்போது வெயில் கொளுத்துவதால் வனப்பகுதியில் உள்ள குட்டை, குளங்களில் தண்ணீர் வற்றி வருகிறது. இதனால் தண்ணீர் தேடி காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து விடுகின்றன.*

*வனப்பகுதியோரம் உள்ள கிராம பகுதிகளில் புகுந்து விடும் யானைகள் அங்குள்ள வாழை, தென்னை தோட்டங்களை பதம் பார்த்து தண்ணீர் குடித்து செல்கின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர்.*

*வாழைகளை நாசம் செய்த யானைகள்*

*இந்த நிலையில் பாலக்காடு மாவட்டம், மலம்புழா அருகே தோனி, புதுப்பரியாரம் கிராம பகுதிக்குள் காட்டு யானைகள் புகுந்தன. இந்த யானைகள் கண்ணம்கோடு பகுதியை சேர்ந்த உண்ணிகிருஷ்ணன் என்பவரது தோட்டத்துக்குள் புகுந்து 300–க்கும் மேற்பட்ட குலை தள்ளிய வாழைகளை ருசி பார்த்தது.*

வாழைத்தோட்டத்திற்குள் யானைகள் அங்கும், இங்கும் ஓடியதால் பல வாழை மரங்கள் வேரோடு சாய்ந்து கீழே விழுந்தன.

அதே போல் கண்ணம்கோடு அஜித்குமார் என்ற விவசாயி தோட்டத்திற்குள் புகுந்த யானைகள் அங்கு பயிரிடப்பட்டு இருந்த 175 வாழைகளை பதம் பார்த்தன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் புதுபரியாரம் கிராம அதிகாரியிடம் புகார் தெரிவித்தனர்.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

வனப்பகுதியில் குட்டைகள் தேவை

தற்போது கோடை வெயில் கொளுத்துவதால் தண்ணீர் தேடி காட்டு விலங்குகள் வனப்பகுதியை ஒட்டி உள்ள கிராமத்திற்குள் புகுந்து விடுகின்றன.

இதனால் பொதுமக்கள், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வனத்துறையினர் காட்டு விலங்குகளை ஊருக்குள் புகுந்து விடாமல் இருக்க தடுப்பு வேலிகள், தண்ணீர் குட்டைகளை வனப்பகுதியில் அமைத்து தண்ணீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் தண்ணீரை தேடி வரும் யானைகள் வனக்குட்டையில் தண்ணீர் குடித்து விட்டு அப்படியே சென்று விடும். ஊருக்குள் வராது. இதை நடைமுறைப்படுத்த வனத்துறையினரும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் காட்டு யானைகள் மற்றும் விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க அரசு முன் வர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**வரும் 2010–11–ஆம் நிதி ஆண்டிற்குள் பால் பொருள்கள் சந்தை மதிப்பு ரூ.5.20 லட்சம் கோடியாக உயரும்**

பிரபா ஜெகன்னாதன்

புதுடெல்லி

இந்தியாவில் பால் பொருள்களின் சந்தை மதிப்பு வரும் 2010–11–ஆம் நிதி ஆண்டிற்குள், நடப்பு நிதி ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்குகளுக்கு மேல் அதிகரித்து ரூ.5.20 லட்சம் கோடியாக உயரும் என 'டெய்ரி இந்தியா' அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

மொத்த உற்பத்தி

மத்திய புள்ளியியல் துறையின் அண்மைக் கால மதிப்பீட்டின்படி, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ரூ.61.64 லட்சம் கோடியாகும். இதனுடன் ஒப்பிடும்போது, பால் பொருள்கள் துறையின் சந்தை மதிப்பு 8.4 சதவீதம் என்ற அளவில் உள்ளது. ஆக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இத்துறை ஓர் உந்து சக்தியாக திகழ்கிறது.

இந்தியாவில், இத்துறையில் வளமான வர்த்தக வாய்ப்பு உருவாகி வருவதால், ரிலையன்ஸ், ஐ.டி.சி., டீ.சி.எம்., கோககோலா மற்றும் பெப்சிகோ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் கால் பதித்துள்ளன. யாகுல்ட் – டேன்ஒன் என்ற பன்னாட்டு நிறுவனமும் இத்துறையில் புதிதாக களமிறங்கி உள்ளது. இத்துறையில் மேற்கொள்ளும் முதலீட்டிற்கு நல்ல ஆதாயம் கிடைக்கிறது.

செலவினம்

இந்நிலையில், வெளிநாடுகளில் பால் உற்பத்தி குறைந்து வருகிறது. மத்திய அரசு இத்துறைக்கு எவ்வித மானியமும் வழங்காத நிலையில், இந்தியாவில் பால் உற்பத்திக்கான செயல்பாட்டு செலவினம் மிகவும் குறைவாக உள்ளது என்று சர்வதேச பால் பொருள்கள் துறையின் ஆலோசகர் ஆர்.எஸ்.கன்னா தெரிவித்தார்.

எனவே, முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் பால் பொருள்கள் உற்பத்தியை மேற்கொண்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

ஆய்வு

சென்ற 2009–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, கடந்த 2008–ஆம் ஆண்டில், சர்வதேச அளவில் பால் உற்பத்தி 68.80 கோடி டன்னாக இருந்தது. முந்தைய ஆண்டுடன்

ஒப்பிடும்போது இது 1.7 சதவீதம் அதிகமாகும். சென்ற 2009–ஆம் ஆண்டில் இது 1.6 சதவீதம் அதிகரித்து 69.90 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக சர்வதேச அளவில் பால் உற்பத்தி ஆண்டுக்கு 2 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வந்தது. தற்போது உற்பத்தி வளர்ச்சி குறைந்துள்ளது.

அதேசமயம், இந்தியாவில் பால் உற்பத்தி ஆண்டுக்கு 4 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. ஆக, உள்நாட்டில் தேவைப்பாடு அதிகரித்து வரும் நிலையில், உற்பத்தியும் உயர்ந்து வருகிறது. சர்வதேச பால் உற்பத்தியில், இந்தியாவின் பங்களிப்பு 15 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. ஆசியாவின் மொத்த பால் உற்பத்தியில், இந்தியாவில் உற்பத்தியாகும் அளவு 40 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

பயன்பாடு

இந்தியாவில் உற்பத்தியாகும் பாலில் 50 சதவீதம் நகர்ப்புறங்களில் பயன்படுத்தப்படுகிறது. வரும் 2011–ஆம் ஆண்டிற்குள் நகர்ப்புற மக்கள் தொகை 40 கோடியை தாண்டிவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நகரங்களில் பால் பொருள்களுக்கான தேவைப்பாடு மேலும் அதிகரிக்கும்.

இந்தியாவில் உள்ள 5,000 நகரங்களில், 1,500 நகரங்களுக்கு விநியோகஸ்தர்கள் வாயிலாக பால் வழங்கப்படுகிறது. பால் வளத் துறையின் செயல்பாடுகள் குறித்து மதிப்பீடு செய்யும் சரத் குப்தா இது குறித்து கூறுகையில், "உள்நாட்டில் பால் விற்பனையில் 80 சதவீதம் அமைப்பு சாராத நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதில், கூட்டுறவு பால் பண்ணைகள் மற்றும் அமைப்பு சார்ந்த நிறுவனங்களின் பங்களிப்பு 20 சதவீதம் என்ற அளவில் மட்டுமே உள்ளது" என்று தெரிவித்தார்.

ஆலோசனை

நம் நாட்டில் பால் உற்பத்தி மற்றும் விற்பனையில் எழுச்சி ஏற்படும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குப்தா ஆலோசனை தெரிவித்துள்ளார். பால் உற்பத்தி தொழிலை வேளாண் சார்ந்த துறையாக கருதாமல், வேளாண் துறைக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் கிராமங்களை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும் என்றும், பால் விநியோகத்தில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்த வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

வரும் 2015–ஆம் ஆண்டிற்குள் இத்துறையில் ரூ.10,000 கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துறை அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருவதால், தனியார் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் இத்துறையில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளும் என ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

**சிப்ஸ் விற்பனை உயர்ந்து வருவதால் உருளைக்கிழங்கு சாகுபடியில் பெப்சிகோ நிறுவனம் தீவிரம்**

தேப்ஜாய் சென்குப்தா

ஹூல்தாஸ்பூர் (ஹூக்ளி)

பெப்சிகோ இந்தியா நிறுவனம் 'லேஸ்' உள்ளிட்ட பல்வேறு பிராண்டுகளில் உருளைக்கிழங்கு சிப்ஸ் வகைகளை விற்பனை செய்து வருகிறது. இவற்றின் விற்பனை அமோக வளர்ச்சி கண்டு வருவதையடுத்து ஒப்பந்த அடிப்படையில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதில் தீவிர கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

ஒப்பந்தம்

இந்நிறுவனம், இதற்காக 6,500 விவசாயிகளுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் 5,000 விவசாயிகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதனையடுத்து ஒப்பந்த விவசாயிகளின் எண்ணிக்கை 11,500–ஆக உயரும். இந்நிறுவனம், சென்ற ஆண்டில் 1,600 ஏக்கர் பரப்பளவில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் வகையில் ஒப்பந்தம் மேற்கொண்டது. இதனை நடப்பு ஆண்டில் 2,250 ஏக்கராக அதிகரித்துள்ளது. அடுத்த ஆண்டில் சாகுபடி பரப்பளவை 3,700 ஏக்கராக உயர்த்த திட்டமிட்டுள்ளது.

பெப்சிகோ நிறுவனம், மேற்கு வங்காளத்திலிருந்து அதிக அளவில் உருளைக்கிழங்கை கொள்முதல் செய்து வருகிறது. சிப்ஸ் உற்பத்தி திறனை அதிகரிக்க திட்டமிட்டுள்ள இந்நிறுவனம், அடுத்த 3 ஆண்டுகளில்

இம்மாநிலத்தில் உருளைக்கிழங்கு கொள்முதலை ஒரு லட்சம் டன்னாக அதிகரிக்க உள்ளது.

விரிவாக்கம்

ஆண்டுதோறும் இந்நிறுவனம் உருளைக்கிழங்கு கொள்முதலை உயர்த்திக் கொண்டே வருகிறது. சென்ற ஆண்டில் 11,500 டன் உருளைக்கிழங்கை வாங்கியது. நடப்பு ஆண்டில் இதனை 22,000 டன்னாகவும், அடுத்த ஆண்டில் 37,000 டன்னாகவும் அதிகரிக்க முடிவு செய்துள்ளது. விரிவாக்கத்தில் இறங்க உள்ள இந்நிறுவனம், இதற்காக ரூ.150 முதலீடு மேற்கொள்ள தயாராகி உள்ளது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.22 சதவீதமாக குறைவு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், மார்ச் 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.22 சதவீதமாக குறைந்துள்ளது. இதற்கு முந்தைய வாரத்தில் இது 16.30 சதவீதமாக இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பச்சைப் பயறு (5 சதவீதம்), உளுந்து (4 சதவீதம்), காய்கறிகள் (2.63 சதவீதம்), காபி (2 சதவீதம்) ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. அதேசமயம், கடலைப்பருப்பு விலை 4 சதவீதம் குறைந்துள்ளது. முட்டை, மக்காச்சோளம், ஊறுகாய் மற்றும் நறுமணப் பொருள்கள் விலை தலா 1 சதவீதம் குறைந்துள்ளது.

உணவு பொருள்களுக்கான பணவீக்கம் சற்று குறைந்து வரும் நிலையில், அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் சென்ற பிப்ரவரி மாதத்தில் 9.89 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, ஜனவரி மாதத்தில் 8.56 சதவீதமாக இருந்தது. எனவே, பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி அண்மையில் 'ரெப்போ ரேட்' விகிதங்களை தலா 0.25 சதவீதம் உயர்த்தியது.

பெட்ரோல், டீசல் மீதான கலால் மற்றும் சுங்கவரியை உயர்த்தியதையடுத்து, எரிபொருள்களுக்கான பணவீக்க விகிதம் உயர்ந்துள்ளது. அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் அதிகரித்துள்ளதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

---

**விவசாய பயிர்களுக்கு திரவஉயிர் உரத்தால் வேளாண் இடுபொருள் செலவு குறைகிறது வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு**

கோவை, மார்ச்.26–

விவசாய பயிர்களுக்கு அதிக அளவில் திரவஉயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் வேளாண் இடுபொருள்களின் செலவு குறைகிறது என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் பாலக்காட்டில் உள்ள போப்ஸ் பயோடெக் நிறுவனமும் இணைந்து திரவஉயிர் உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்து கொள்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டன.

இதற்கான நிகழ்ச்சி வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள கருத்தரங்கு கூடத்தில் நடந்தது. இதில் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

திரவஉயிர் உரம்

தற்போதைய நவீன சாகுபடி முறையில் திரவஉயிர் உரங்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாக விளங்கி வருகிறது. உயிர் உரங்களான அசோடோபாக்டர், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், குளுகோனா, அசிடோபாக்டர், அசோலா

மற்றும் நீலபச்சை பாசி ஆகியவற்றில் தழைச்சத்துகள் அதிக அளவில் உள்ளன. பயிர்களுக்கு உயிர் உரங்களை அளிப்பதன் மூலம் பயிர்களின் மகசூல் 15 முதல் 20 சதவீதம் வரை கூடுவதோடு ரசாயன உரங்களின் பயன்பாட்டையும் 25 சதவீதம் வரை குறைக்க முடியும்.

இத்தகைய உயிர் உரங்களை வேளாண் பல்கலைக்கழகம் கடந்த 1980-ம் ஆண்டு முதல் தயாரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. கடந்த 5 வருடங்களாக திரவ வடிவத்திலும் உயிர் உரங்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

திட உரங்களைவிட, திரவ உயிர் உரங்களில் அதிக அளவிலான நுண்ணுயிர் எண்ணிக்கை, நீடித்த சேமிப்பு காலம் மற்றும் அதிக திறனுடன் செயல்படுகிறது.

மேலும் விவசாய பயிர்களுக்கு திட உரங்களை விட திரவஉயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் உயிர்உர இடுபொருட்களின் செலவை குறைக்க முடியும்.

இவ்வாறு முருகேசபூபதி கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

முன்னதாக நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு மைய இயக்குனர் ஆர்.கணேசன், போப்ஸ் பையோடெக் நிறுவன இயக்குனர் ஆப்ரகாம், ஆகியோர் வேளாண் பலக்லைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் வாயிலாக வேளாண் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட திரவ உயிர் உரத்தை போப்ஸ் பயோடெக் நிறுவனம் வணிக ரீதியாக உற்பத்தி செய்து தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் விற்பனை செய்ய வழிவகை செய்கிறது.

இந்த நிகழ்ச்சியில் வேளாண் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மைய இயக்குனர் சுப்பிரமணியன், நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மக்காச்சோளம் ஏற்றுமதி சரிவு**

நடப்பு பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) மார்ச் 23-ந் தேதி வரையிலான காலத்தில், மக்காச்சோளம் ஏற்றுமதி 66 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் சரிவடைந்து, 4 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. உள்நாட்டில் மக்காச்சோளத்திற்கான தேவைப்பாடு அதிகரித்துள்ள வேளையில், அளிப்பு குறைவாக உள்ளதே ஏற்றுமதி குறைந்ததற்கு முக்கிய காரணமாகும்.

சென்ற பருவத்தின் இதே காலத்தில் நம் நாட்டிலிருந்து 12 லட்சம் டன் மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யப்பட்டது.